EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 8

## தமிழன் கண்ட கலைகள்

*திருமதி. எஸ். காமேஸ்வரி*
உதவிப்பேராசிரியர்,இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: musicezhil@gmail.com

## *முன்னுரை*

கலை என்பது இயற்கை அன்னையின் பரிபூரண அருளினால் விளங்கும். கலைஞனின் உள்ளத்தில் மென்மையான உணர்வின் எதிரொலியே கலை. சுவை, இசை, காற்று, நிலம், மொழி, ஒழுக்கம், கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை நாட்டுப்புறக்கலை போன்ற கலைகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டவர் நம் தமிழர்கள் என்பதை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## இசை

இசையை ஏழாகக் கண்டனர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என்பன. சங்கத் தமிழானது இயல், இசை, நாடகமென மூன்று வகையாகும். இதில் இசை என்பது தமிழிசையாகும். பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க காலமென அறியப்படுகிறது. இம்முச்சங்க காலம் இற்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே தமிழர்

இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.

## சுவை

சுயையை ஆறாகக்கண்டனர். இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு எனக் கண்ட தமிழன் இன்னும் ஏழாவது சுவையாக கண்டதாக கூறப்படவில்லை.

## நிலம்

நிலத்தை ஐந்தாகக் கண்டனர். குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும், முல்லை - காடும் காடு சார்ந்த இடமும், மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும் நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும், பாலை - மணலும் மணல் சார்ந்த இடமாகவும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டறிந்த தமிழர்கள் இன்னும் ஆறாவது நிலப்பரப்பை பற்றி எவரும் கண்டறியவில்லை.

காற்று

இசையை ஏழாக, சுவையை ஆறாக, நிலத்தை ஐந்தாகக் கண்டவர்கள், காற்றையும் நான்காகக் கண்டு வகைப்படுத்தி கூறியுள்ளனர்.

'கிழக்கே இருந்து வருகின்ற காற்றுக்குப் பெயர் கொண்டல்' எனவும்

மேற்கேயிருந்து வருகின்ற காற்றுக்குப் பெயர் 'கோடை' எனவும்

வடக்கே இருந்து வருகின்ற காற்றுக்குப் பெயர் 'வாடை' எனவும்

தெற்கே இருந்து வருகின்ற காற்றுக்குப்பெயர் 'தென்றல்' எனவும் பகுத்து ஆராய்ந்து கூறியுள்ளனர் தமிழர்கள்.

## மொழி

தமிழ் மொழியை மட்டும் மூன்றாகக் கூறியுள்ளனர். இயல், இசை, நாடகம் உலகில் எந்த மொழியும் இரண்டு, மூன்று எனக் கூறப்படவில்லை. தமிழ்மொழி மட்டுமே மூன்றாகக் கண்டனர் தமிழர்கள். இம்மூன்றும் 'முத்தமிழ்' என வழங்கிற்று மொழியை இசையுடனும், நாடகத்துடனும், இணைந்துப் பார்க்கும் கண்ணோட்டம் பிறமொழிகளில் காணப்படாததே சிறப்பு.

## ஒழுக்கம்

திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள், திணையை இரண்டாக பிரித்தனர். உயர்திணை, அஃறிணை, மக்கள் உயர்திணையாகவும், பிற அனைத்தும் அஃறிணையாகவும் தமிழ்ச் சான்றோர்கள் கண்டு கூறிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின.

## கட்டக் கலை

பண்டையக் கலைகளில் கட்டடக்கலையும் ஒன்று என்பதில் ஐயமில்லை. தமிழர்கள் மிக நீண்ட காலமாகவே ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நிலையாக வாழ்ந்துவருபவர்கள். தனித்துவம் வாய்ந்த ஒரு பண்பாட்டைக் கொண்டிருப்பவர்கள்.

ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழ்நாட்டில் கற்களால் கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கட்டடங்களில் மிகப் பெரும்பாலானவை கோயில்களே. இவை கட்டடக்கலையின் உயர் மரபைச் சாந்தவை. தமிழர்களால் உருவானவை. தஞ்சை பெரிய கோவில் மதுரை மகால், மலைக்கோட்டை, செஞ்சிக்கோட்டை,

மாமல்லபுரம், பாலங்கள், குகைகள், சிற்பங்கள், கடவுளின் திருவுருவங்கள் என அனைத்தும் கட்டடக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டது. இன்றும் இவை கண்டு வியந்து பாராட்டுகின்றனர் என்பதே சிறப்பு.

## காவியக்கலை

காவிக்கலையின் இலக்கணம் எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாமல் இன்பம் தருவதாக இருக்க வேண்டும். பொதுவாக செய்யுள் நடையிலேயே காவியங்கள் இயற்றப்படுவது வழக்கம், காவியங்கள் கம்ப ராமாயணம், வில்லிபாரதம் போன்றவையும் கூறப்படுகிறது. காவியங்கள் என்றால் அவற்றுள் ஓவியங்களும் இருத்தல் வேண்டும்.

## சிற்பக்கலை

சிற்பங்கள் செதுக்குவதையும், சிற்பங்களிலும் வெளிப்படும் தமிழரின் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் தமிழர் சிற்பக்கலை குறிக்கும். இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன.

## ஓவியக்கலை

"தமிழகத்தில் கற்கால குகைகளிலே மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறுசில குறியீடுகளையும் காணக்கிடைக்கின்றன. சங்க காலத்திலேயே தமிழர்களிடையே ஓவியக் கலை வளர்ச்சி நிலையில் இருந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. தமிழர் சம்பந்தப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. அதாவது சுவரில் எழுதப்பட்ட ஓவியங்கள். மிகச்சில மரப்பலைகளிலும், கிழி (துணிச்சீலை) களிலும் எழுதப்பட்டன."

"பழந்தமிழரின் ஓவியங்கள் பனைமலை ஓவியத்தில், காஞ்சி கோயிலில், திருமலைப்புரக் கோயிலில், சித்தண்வாசல் குகையில், தஞ்சை பெரியகோயிலில், மதுரை நாயக்கர் கால மண்டபங்களில் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன"

## நாட்டுப்புறக் கலை

நாட்டுப்புறக் கலைகள் ஒரு சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையை வேரூன்றி பிரதிபலிக்கின்றன. அவை நாட்டுப்புற மற்றும் கலாச்சார பாரம்பரியத் துறைகளின் தொடர்புடையவை, கலாச்சாரத்தின் கூறுகளை உள்ளடக்கியது. நாட்டுப்புற கலைகளில் இசை, நடனம் மற்றும் கதை கட்டமைப்புகள் போன்ற வடிவங்கள் அடங்கும்.

## முடிவுரை

எக்கலையானாலும் அதற்குரிய கலைகளுக்கு பின்புலம் உள்ளது. இவை கலை என்றும், கலை அல்ல என்றும் கூற இயலாது. கலை என்ற சொல் மக்களின் உணர்ச்சிக்கும், கற்பனைக்கும் முக்கியதுவதும் தருகிறது. பன்முகத் தன்மை கலைகளுக்கு உண்டு என்றபடியால் கலைகளை ஒரே வகைப்பாட்டில் வகைப்படுத்துவது கடினம். நீண்ட காலமாகவே கலையை பல்வேறு விதமாக வகைப்படுத்தி வந்துள்ளனர் தமிழர்கள்.

இவ்வாறு கலைகள் என்று எடுத்துக்கொண்டால், மேற்கூறிய வகைகள் மட்டுமல்லாது எழுத்துக்கலை, விளையாட்டுக் கலை ஏன் வாழ்க்கை முறையே ஓர் கலைத்தான் என்று சிறப்பாக கூறக்கூடிய அளவிற்கு கலைகள் மனிதனிடமிருந்து அன்றாடம் வளர்ந்துவருகிறது.